


**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்,**

**அரண்வாயல் குப்பம்**

**திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**




**சுற்று மடல் எண்: 91** **நாள் : 25.02.2022**

**"நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம்; இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" (யோவே 2 : 13)**

## என் பாசத்துக்குரிய அருட்சகோதரிகளே!

**நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்.**

தவக்காலத்தை எதிர்நோக்கியிருக்கும் நம் சகோதரிகளுக்கு
என்ன செய்தியைக் கொடுக்க வேண்டும் என்று
ஆலயத்தில் ஆண்டவர்முன் அமர்ந்து தியானித்துக் கொண்டிருந்தேன்.
அவர் சொல்லும் செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

**தவக்காலம் நம் உள்ளங்களைக் கிழித்துக் கொள்ள வேண்டிய காலம்.**

எப்போது எவற்றையெல்லாம் நாம் கிழிக்கிறோம் என்று பாருங்கள்.

- காலண்டரில் தேதியைக் கிழிக்கிறோம் - எவை எல்லாம் முடிந்துவிட்டதோ அவைகள் கிழிக்கப்பட வேண்டும்.
- சில ஆவணங்களின் பக்கங்களைக் கிழிக்கிறோம் - தவறாக எழுதப்பட்டவை, தவறுதலாகப் பக்கம் அழுக்கடைந்துவிட்டால், பார்ப்பதற்கு நேர்த்தியாக இல்லை என்றால் கிழிக்கப்பட்டு கிழிக்கப்பட்டதற்கான அடையாளங்கள் தெரியாமல் செப்பனிடுகிறோம்.
- குப்பைகள் கிழிக்கப்படுகின்றன - இனி இவை தேவையில்லை குப்பையில் எறியப்பட வேண்டும் என்பவை கிழிக்கப்படுகின்றன.
- பழைய பயனற்ற தாள்கள், ஆடைகள் கிழிக்கப்படுகின்றன.

**இந்த தவக்காலத்தில் நம்மைக் கிழித்துக்கொள்ள ஆண்டவர் அழைப்புவிடுக்கிறார்.**

**காலண்டரில் தேதி கிழிப்பதைப்போல நாம் கிழித்தெறிய வேண்டியவை பல நம்மிடம் உள்ளன.**

பயனற்ற பலவற்றை நாம் சுமந்து நிற்கிறோம்.
பழைய அவமானங்கள், கோபங்கள், வெறுப்புணர்வுகள்,
நம் பொய்யான கற்பனைகள், அடுத்தவரைப் பற்றிய தவறான புரிதல்கள்,
தப்பெண்ணங்கள் இப்படி நேற்றைய அனுபவங்களால் ஏற்பட்ட
அடையாளங்களைச் சுமந்து நிற்கிறோம்.
இவற்றை முற்றிலுமாக கிழித்து எறிந்துவிட்டு
புத்தம் புதிய நாளை நம் காலண்டரில் அடையாளம் காட்ட
ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.



**இந்தப் புதிய நாள் ஆண்டவரை நாம் சார்ந்து வாழவும்,**
**எல்லாச் சூழலிலும் உண்மையில் ஊன்றி நிற்கவும்,**
**புதிய நேர்மறையான பார்வையோடு வாழ்வை அடையாளம் காணவும்**
**நமக்கு உந்துசக்தி தரும். இதற்கான**
**ஆண்டவரின் அழைப்பை இத்தவக்காலத்தில் ஏற்போம்.**

நம் வாழ்வில் நாம் மிகச்சிறந்த மனிதர்களாய் இருந்தாலும்
ஆங்காங்கே நம் பக்கங்களில் சில தவறுகள் இடம்பெற்றிருக்கின்றன.
நம்மால் சிலரை ஏற்றுக்கொள்ளவே இயலாது.
எவ்வளவு நன்மை செய்தாலும் அவர்களில் ஏதாவது குறைகளைக் கண்டுபிடித்து
அடுத்தவர்கள் மீது ஏதாவது கறைகளைப் பூசிவிடவேண்டும்
என்ற வேட்கை நம்மை உந்தித்தள்ளும்.

சில வேளைகளில் இந்தப் பொறாமைத் தீ
காயின் ஆபேலைக் கொன்றது போல
அடுத்தவரின் நற்பெயரைக் கொலை செய்ய நம்மை இட்டுச்செல்கிறது.
இந்த இழிவான கொலை செய்தலிலிருந்து நாம் திரும்ப வேண்டும்
என திருந்தந்தை தவக்காலத்திற்காக அழைப்பு விடுக்கிறார்.
நாம் இந்த அழுக்குகளால் அசிங்கமான
நம் வாழ்வின் பக்கங்களை கிழித்தெறிந்து விட்டு
அழகாய் நம்மை மீண்டும் அன்பு, மனிதநேயம்,
தன்னைப்போல் பிறரை நேசிப்பது,
நமக்கு என்ன அளவையால் அளக்கிறோமோ
அதே அளவையால் அடுத்தவருக்கும் அளப்பது போன்ற
**நல்ல அடையாளங்களால் நம் பக்கங்களை நிரப்பிக்கொள்ள**
**இத்தவக்காலத்தில் ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.**

நம் வாழ்வில் பல குப்பைகளை நாம் சுமந்து கொண்டே செல்கிறோம்.
நாம் சுமக்கும் மிகப்பெரிய குப்பை கவலை.
கவலையைப் போல் பயனற்ற ஒன்று இருக்க முடியாது.
அதுபோல் அவசியமற்ற பயம் நம்மை சூழ்ந்துகொள்கிறது.
பயம்தான் அனைத்து தீமைகளுக்கும் ஆணிவேர்.
ஆனாலும் பயத்தைப் பாதுகாத்து வாழ்கிறோம்.
நாம் சுமக்கும் மற்றொரு குப்பை ஏமாற்றம்.
அப்பப்பா பிறந்தது முதல் இன்று வரை நாம் சந்தித்த
ஏமாற்றம் என்ற குப்பையை பாதுகாத்து வைத்திருப்பதனால்தான்
அவ்வப்போது அவற்றை நினைவு கூர்ந்து பேசுகிறோம்.
**இந்தக் குப்பைகளை கிழித்தெறிய தவக்காலம் நம்மை அழைக்கிறது.**

**ஆண்டவர் என்ற உறுதியான பாறை மீது நம்மை இறுகப்பிணைத்துக் கொண்டால் நம்மை அச்சுறுத்தும் கவலை, பயம், ஏமாற்றங்கள் நொடிப்பொழுதில் காணாமல் போக நம்பிக்கை, மகிழ்ச்சி, நிறைவு கொண்டவர்களாய் இத்தவக்காலத்தில் வாழ்வோம்.**

பழையவை, பயனற்றவை, காலாவதியானவை
பலவற்றை கிழித்து எறியாமல் நாம் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம்.
பழம் பெருமைகள் பேசிவாழ்வது, இன்று என்ன செய்தோம் என்பது பற்றி
அக்கறையின்றி பழைய காலத்தில் வாழ்வது,
பழைய காலத்தில் நாம் வகித்த பதவிகள், சாதனைகள்
பலவற்றைச் சொல்லிச் சொல்லி அதற்கு ஏற்றாற்போல்
நாம் நடத்தப்படவில்லை என்ற வருத்தத்தில் வாழ்வது,
அதிருப்தி, நிறைவின்மை, சலிப்பு இவை நம்மை ஆட்கொள்ள விட்டுவிடுவது
போன்ற பழைய பயனற்றவைகளைக் கிழித்து எறிந்து விடுவோம்.
ஆண்டவர் அன்றாடம் நாம் அவரின் பிரசன்னத்தில் நம்மைப் புதுபித்துக்கொள்ள,
புத்துருவாக்கம் செய்ய அழைக்கிறார்.

**ஒவ்வொரு நொடியும் வாழ்வதுதான் வாழ்க்கை**
**இத்தவக்காலத்தில் இதனைப் புரிந்து கொண்டு ஒவ்வொரு நாளும் ஆண்டவரின் பேரன்பில் புதிதாய் வாழ்வோம். நிறைவை நோக்கி வழி நடப்போம்.**

**<u>தவக்காலத்தில் நாம் கண்டிப்பாய் கடைபிடிக்க வேண்டிய சுய தவங்கள்:</u>**

- அதிக நேரம் ஆண்டவரின் பிரசன்னத்தில் செலவிடுவோம்.
- அவசியமின்றி பேசுவதைத் தவிர்ப்போம். மௌனம் நம்மை பல தவறுகளிலிருந்து காக்கிறது. எனவே மௌனத்தில் நிலைத்திருப்போம்.
- தவறான தகவல் பரிமாற்றங்களால் மாசடைந்துள்ள சமூகத்தில் உண்மையை மட்டுமே பேச முடிவெடுப்போம். ஆதாரம் இல்லாத செய்திகளைப் பரப்பி உலகை அசுத்தமாக்குவதிலிருந்து நம்மைக் காத்துக்கொள்வோம்.
- முடிந்தவரை எல்லோருக்கும் நன்மை செய்வோம். நமக்குத் தீமை செய்பவர்களை, நம்மீது இல்லாதது பொல்லாதது எல்லாம் கூறுபவர்களை மன்னித்து விடுவோம்.
- மகிழ்ச்சியோடும் நன்றியுணர்வோடும் வாழ்வோம்.
- சண்டையிடுவது, உரக்க விவாதிப்பது, நான் சொல்வதுதான் சரி என்று வாதிடுவது தவிர்க்கப்பட்டு இனிமையாகவும், நிதானமாகவும் உரையாடுவதில் ஈடுபடுவோம்.
- முடிந்தவரை சின்னச்சின்ன தவமுயற்சிகளில் ஈடுபடுவோம்.
- ஒழுங்கு அனுசரிப்பதைப் பிரமாணிக்கமாகக் கடைபிடிப்போம். அன்றாட பொதுசெபங்களில் குறிப்பிட்ட நேரத்தில் கலந்துகொள்வோம்
- படிப்பதற்கு நேரம் ஒதுக்குவோம்
- அன்றாடம் ஆன்ம ஆய்வில் சுயதரிசனம் செய்வோம்.

**இவை போன்ற ஒருசில அம்சங்களை நம் தவக்கால ஒழுக்கமாக்கிக் கொள்வோம்.**
**தவக்காலத்தை ஆண்டவரின் அருட்பெருக்கின் காலமாகக் கொண்டு**
**நம்மைப் புனிதப்படுத்திக் கொள்வோம்.**

## சகோதரிகள் கவனிக்க:

ஏற்கெனவே தியானம் செய்யாத சகோதரிகளின் பெயர் பட்டியல் கேட்கப்பட்டது. அவர்களுக்கான வாய்ப்புகள் கீழே கொடுக்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்படும் 3 வாய்ப்புக்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

இல்லத்தலைமைச் சகோதரிகள் உங்கள் இல்லத்தில் தியானம் செய்யாத சகோதரிகள் கீழே உள்ள எந்த தியானத்தில் கலந்து கொள்கிறார்கள் என உடனடியாக எனக்குத் தெரியப்படுத்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**தியானம் : I**

இடம் : சபைத் தலைமையகம்

நாட்கள் : மார்ச் 9 முதல் 16 வரை

கருத்தாளர் : அருட்தந்தை தேவ நேசன்

**தியானம் : II**

இடம் : முடிச்சூர் தியான இல்லம்

நாட்கள் : மார்ச் 28 முதல் ஏப்ரல் 4 வரை

கருத்தாளர் : அருட்தந்தை சகாய செல்வராஜ் (Cap)

**இந்த இரு தியானங்களில் ஒன்றில் சகோதரிகள் கலந்து கொள்வதை விரும்புகிறோம். மிக அரிதான காரணத்தை முன்னிட்டு மட்டும் பின்வரும் Online தியானத்தில் கலந்து கொள்ளலாம்.**

**தியானம் : III (English)**

Online Retreat – April 4th to 9th

International Lenten Retreat

Thalir Center

“**ஆண்டவர் அருள் நிறைந்தவர், இரக்கம் மிக்கவர், நீடிய பொறுமையுள்ளவர், பேரன்பு மிக்கவர்**” இதனை இத்தவக்காலத்தில் உணர்ந்து கொள்வோம்.

## சபைத் தலைமை அன்னையின் 2022 மார்ச் மாதப் பணித்திட்டம்


| | | |
|---|---|---|
| 01 – 02 | - | Prayer and Reflection |
| 03 | - | TNBC & TNCRI Joint Meeting – Madurai |
| 04 – 06 | - | சபைத் தலைமையகம் – அலுவலகப் பணிகள் |
| 07 – 08 | - | சேலம் நிலப்பத்திரப்பதிவு |
| 09 – 10 | - | சகோதரிகள் சந்திப்பு – விளார் கல்லூரி |

| | | |
|---|---|---|
| 11 | - | Vita Consecrata தமிழாக்கம் Book Release – Madurai |
| 12 | - | தமிழக அளவில் அடையாளப்படுத்தும் நிகழ்வு – (ஆயர் பேரவையின் தீர்மானத்திற்கு உட்பட்டது) |
| 13 | - | சபைத் தலைமையகம் – அலுவலகப் பணிகள் |
| 14 – 17 | - | கொள்கை வரைவு – கலந்துரையாடல் மைய நிர்வாகக் குழு |
| 18 | - | Vilar – B.Ed Convocation |
| 19 | - | Vilar – Arts and Science College Convocation |
| 20 – 31 | - | பொதுப்பேரவை தயாரிப்புப் பணிகள் |

- நேரம் கிடைப்பதற்கேற்ப சந்திக்காத சகோதரிகளை சந்திக்க நேரம் ஒதுக்கப்படும். அதுபற்றிய தகவல் உங்களுக்கு அனுப்பப்படும்.

## இத்தவக்காலத்தில்

**“உன் கடவுளாகிய ஆண்டவர் மீது அன்பு பாராட்டு;**
**அவரது குரலுக்குச் செவிகொடு.**
**அவரையே பற்றிக்கொள்” (இ.ச. 30:20)**
**“அப்பொழுது உன் ஒளி விடியல் போல் எழும்;**
**விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும்” (எசா. 58:8).**




அக ஒளியின் பாதையில்

Sr. Maria Philomi FBS

சபைத் தலைமை அன்னை